# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

**முறையீட்டு மனு எண். 117/மா/2018**

**நாள் : 01/10/2018**

திருமதி R. புவனேஸ்வரி,
கோயம்புத்தூர் – 641 001. – முறையீட்டு மனுதாரர்

மாநகராட்சி ஆணையர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி,
கோயம்புத்தூர். – எதிர் மனுதாரர்

கோயம்புத்தூர், பூ மார்க்கெட், சித்திவிநாயகர் கோயில் தெரு, எண்.78 முகவரியில் வசித்து வரும் திருமதி R. புவனேஸ்வரி அவர்களின் 24.05.2018 நாளிட்ட முறையீட்டு மனு 28.05.2018 அன்று பெறப்பட்டு 117/2018 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரர் சமர்ப்பித்த ஆவணங்கள் மற்றும் விசாரணையின்போது அவர் அளித்த வாக்குமூலம் ஆகியவை பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

கோயம்புத்தூர், பூ மார்க்கெட், சித்திவிநாயகர் கோயில் தெரு, எண்.78 முகவரியில் வசித்து வரும் திருமதி R. புவனேஸ்வரி என்பவர், கோயம்புத்தூர் மாநகராட்சி, பொறியியல் அலகில் உதவி செயற்பொறியாளராகப் பணியாற்றிவரும் தான் செயற்பொறியாளராகப் பணியமர்த்தம் செய்வதற்கான தகுதி இருந்தும் பதவி உயர்வு வழங்கி செயற்பொறியாளராக பணி நியமனம் செய்யாமல் மாநகராட்சி காலம் கடத்தி வருவதாகத் தெரிவித்து, தனக்கு பதவி உயர்வு வழங்கி அப்பணியிடத்தில் பணி அமர்த்தம் செய்ய ஆணையிடக்கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரிடம் 10.07.2018 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. 1988–ஆம் ஆண்டு வேலை வாய்ப்பு அலுவலகம் மூலமாக பொருத்துநராக பணி நியமனம் செய்யப்பட்ட 11 நபர்களில் தானும் ஒருவர் என்றும், தனது பணிமூப்பு பட்டியல் வரிசை எண்.9 என்றும் விசாரணையின்போது தெரிவித்தார். 1990–ஆம் ஆண்டு இளநிலை பொறியியல் பட்டப்படிப்பில் தேர்ச்சி பெற்ற தான் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்து, நீதிமன்றத் தீர்ப்பின்படி உதவிப் பொறியாளர் பணி இடத்தில் பணி நியமனம் செய்ய ஆணையிடப்பட்டது என்றும் விசாரணையின்போது தெரிவித்தார். தனக்கு பின்னர் பணியில் சேர்ந்தவர்கள் செயற்பொறியாளர் பணிக்கு பதவி உயர்வு பெற்று சிலர் பணியில் தொடருகின்றனர் என்றும் சிலர் ஓய்வு பெற்றுவிட்டனர் என்றும் தெரிவித்தார்.

3. முறையீட்டு மனுதாரர் தனது பதவி உயர்வு குறித்து 27560/14 19572/15 மற்றும் 24258/2016 எண்களிட்ட நீதிப்பேராணை மனுக்களை மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்துள்ளார். 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 10 (3) (b)–இன் படி நீதிமன்றமொன்றின் முன்பு நிலுவையிலுள்ள பொருட்பாடு எதனையும் இம்முறைமன்ற நடுவம் விசாரணை செய்தல் கூடாது. எனினும், முறையீட்டு மனுதாரர் சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல்

செய்திருந்த நீதிப்பேராணை மனுக்கள் குறித்த விவரங்களை இம்முறைமன்ற நடுவத்தில் தாக்கல் செய்த முறையீட்டு மனுவில் தெரிவிக்காத நிலையிலேயே அதாவது மனு முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்குறிப்பிட்ட நீதிப்பேராணை மனுக்களில் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் 11.09.2018 அன்று தீர்ப்பினை வழங்கியுள்ளது. அத்தீர்ப்பில் முறையீட்டு மனுதாரரின் கோரிக்கை குறித்து பரிசீலனை செய்யுமாறு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு செயலர் அவர்களுக்கு ஆணையிடப்பட்டுள்ளது. எனவே, முறையீட்டு மனுதாரரின் மனுமீதான நடவடிக்கையை இந்நிலையிலேயே முடித்து கொள்ள முடிவு செய்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2018– ஆம் ஆண்டு, அக்டோபர் திங்கள், 1–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளருக்காக.

1.10.2018

பெறுநர்

1. திருமதி R. புவனேஸ்வரி,
79, சித்திவிநாயகர் கோவில் வீதி,
பூமார்க்கெட்,
கோயம்புத்தூர் – 641 001.

2. ஆணையாளர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி,
கோயம்புத்தூர்.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,
பேரூராட்சி பிரிவு –3,
இகோ. / உதிரிகள்